**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.**
**முன்னிலை – திரு.பி.எஸ். ரஸ்கின்ராஜ், பி.ஏ.,எல்.எல்.பி.,**
**சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.**
**2025–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18–ம் நாள் திங்கட்கிழமை**
**I.A.No.2 /2025 and O.S.201 / 2023**

பாண்டியம்மாள்
– உத்தேசிக்கப்பட்ட மனுதாரர் / அவசிய தரப்பினர்

/ எதிர் /

1. அலெக்ஸ்பாண்டி – எதிர்மனுதாரர் / வாதி
2. ஜெயமாலா
3. வேலம்மாள் –எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இவ்வுத்தரவுகள் என் முன்பு கடந்த 06.08.2025–ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்தின் முன்னர் வந்த போது, உத்தேசிக்கப்பட்ட மனுதாரர் / அவசிய தரப்பினர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.ஜோதிலிங்கம் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.பாஸ்கரன் அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வழக்கு ஆவணங்கள் மற்றும் வாதங்கள் பரிசீலிக்கப்பட்டு இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்………

## உத்தரவு

இம்மனுவானது மனுதாரரால் Order 1 Rule 10 (2) CPC and Sec 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1. மனுவின் சுருக்கம்:–

மனுதாரர் உத்தேச பிரதிவாதி ஆவார். தாவா வழக்கு சொத்தை பொறுத்தவரை மனுதாரர் அவசிய தரப்பினர் ஆவார். மனுதாரரின் கணவர் ராஜேந்திரன் ஆவார். மனுதாரருக்கும் அவரது கணவருக்கும் வாரிசுகள் எதுவும் இல்லை. மனுதாரரின் சொத்துக்களுக்கு அருகாமையில் முத்துபேச்சி என்பவரின் சொத்து உள்ளது. மேற்படி முத்துபேச்சிக்கு வாரிசுகள் எதுவும் இல்லை. ஆகையால், தவசித்தேவருக்கு தபசில் சொத்தைப் பொறுத்து செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார். மேற்படி தவசித்தேவரின் மகள் தான் மனுதாரர் பாண்டியம்மாள் ஆவார். தவசித்தேவர் காலத்திற்கு பிறகு மனுதாரர் கடந்த 35 ஆண்டுகளாக சர்வே எண். 200 / 5 மற்றும் 200/ 6 மற்றும் 191 / 6 ல் கண்ட சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறார். மேற்படி சொத்தில் கொட்டகை அமைத்திருக்கிறார். வாதி 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கு தாக்கல் செய்திருக்கிறார். தாவா சொத்து

மனுதாரர் அனுபவத்தில் இருக்கிறது. ஆக, மனுதாரரையும், வழக்கையும் 3ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்க வேண்டும் என்பதாகும். எனவே மனுவை அனுமதிக்க வேண்டும் என்பதாகும்.

**2. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:—**

மனு நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யக் கூடிய ஒன்றாகும். மனுதாரர் / உத்தேச பிரதிவாதிகளுக்கும் தாவா சொத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை. முத்துப்பேச்சி தவசித்தேவருக்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் வாதிக்கு தெரியாது. உண்மையில், ஆதியில் விஜயலட்சுமி என்பவருக்கு பாத்தியப்பட்டு உரிமை மற்றும் உடமையில் இருந்து வந்த வழக்கிடை சொத்தை ஒரு பதிவு செய்யப்பட்ட விற்பனை பத்திரத்தின் மூலம் கருப்பயி அம்மாள் அவர்களுக்கு விற்பனை செயதுள்ளார். பின்னர் கருப்பாயி அம்மாள் பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் தன் மகன் திவ்யா அவர்களுக்கு எழுதிக் கொடுத்துள்ளார். பின்னர் மேற்படி திவ்யா தன் கணவர் வாதிக்கு ஆதரவாக பதிவு பெற்ற ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரத்தை பதிவு செய்து கொடுத்தார்

என்றும், பின்னர் வழக்கிடை சொத்தை வாதி ஸ்ரீ கோகுலம் சிட் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவத்திற்கு ஆதரவாக ஒரு அடமானப் பத்திரத்தை எழுதிக் கொடுத்துள்ளார். இவ்வாறு தொடர்சியான அனுபவங்களில் இருந்து வருகின்ற சொத்தினை விஜயலட்சுமி கருப்பாயிக்கு 2019–ம் ஆண்டு விற்பனை செய்த போதே அதில் பிரதிவாதிகள் அல்லது மனுதாரருக்கு ஏதேனும் உரிமை இருந்திருந்தால் தடுத்து நீதிமன்றம் மூலம் வழக்கிட்டு தங்கள் உரிமையை கோரியிருக்கலாம் அவ்வாறு வழக்கிடாமல் இருந்து வந்து தற்போது வரையில் வாதி மீது வழக்கு எதுவும் தாக்கல் செய்யாமல் இருந்து வருவதற்கு காரணம் பிரதிவாதி மற்றும் மனுதாரருக்கு எவ்வித வழக்கிடும் உரிமை மற்றும் உரிமை கோரும் ஆவணங்கள் எதுவும் இல்லாத காரணத்தினால் வாதி தாக்கல் செய்திருந்த வழக்கில் பிரதிவாதிகள் சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்துவிட்டு பொய்யான காரணங்களை கூறி எதிரிகோரிக்கையாக பாதகமான உரிமைக் கோரிக்கை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரமும் முன்வைத்தார்கள். அதை உரிய சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்க முடியாத காரணத்தினாலும், வாதி தரப்பில் நியாங்களை உரிய சாட்சி

மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிருபணம் செய்துவிட்ட காரணத்தினாலும், பிரதிவாதிகள் வழக்கில் தோற்றுவிடுவோம் என்ற எண்ணத்தில் வழக்கினை எப்படியாவது இழுத்தடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மேலும், அசல் வழக்கு எண். 201 / 2023 மற்றம் இடைநிலை மனு எண். 725 / 2023 விலும் அத்தியாவசிய தரப்பினராக சேர்க்க வேண்டும் என மனுவினை வேண்டுமென்றே காலம் தாழ்த்தி தாக்கல் செய்துள்ளதாலும், பிரதிவாதிகளின் துண்டுதலின் பேரில் புதியதாக வழக்கு மூலத்தை உருவாக்க முயன்று இம்மனுவை தாக்கல் செய்திருப்பது சட்டப்படியானது அல்ல. எனவே, மனுவை தள்ளுபடி செய்யக் கோரி எதிர்மனுதாரரால் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் இம்மனுக்கள் அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

***3.1.*** முதலாவதாக, தாவா வழக்கிடை சொத்தில் மனுதாரர் / உத்தேச பிரதிவாதி அனுபவத்தில் இருக்கிறாரா? என்பது தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையாகும். இதுசம்பந்தமாக, அசல் வழக்கில் வாதியை குறுக்கு விசாரைணை செய்யும்

போது, வா.சா.1–ன் குறுக்கு விசாரணை சாட்சியமானது, **நான் தானமாக பெற்ற பத்திரத்தின் வடக்கு மாலாக சர்வே எண். 191 / 6–ல் கட்டுப்பட்ட கருப்பத்தேவர் மனைவி முத்துப்பேச்சியின் கைவசம் உள்ள சொத்தும், சர்வே எண். 191 / 5–ல் கட்டுப்பட்ட அரசு புறம்போக்கு ரோடும் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்...............தாவா சொத்தில் 1, 2 பிரதிவாதிகள் மற்றும் உத்தேச பிரதிவாதி பாண்டியம்மாளும் சேர்ந்து கிழமேல் 15 அடியும், தென்மேற்கு 15 அடியும் தகர செட்டி போட்டுள்ளார்கள் என பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல............வழக்கு சொத்தில் உத்தேச பிரதிவாதி கடந்த 35 வருடங்களாக அனுபவத்தில் இருந்து வருவது தெரியுமா என்றால் சரியல்ல. எனது மாமியார் கிரையம் வாங்கிய பிறகு ஆக்கிரமிப்பு செய்து வருகிறார்** என வாதியின் குறுக்கு விசாரணை சாட்சியத்தை கவனத்தில் கொள்ளும்போது உத்தேச பிரதிவாதி தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்து வருவதாக ஒப்புக் கொண்டு இருக்கிறார்கள். ஆக, வழக்கு மூலம் உத்தேச பிரதிவாதிக்கு எதிராக உள்ளது. தாவா சொத்து சம்பந்தமாக, உத்தேச பிரதிவாதிகளும் உரிமை கொண்டாடுவதால் உத்தேச பிரதிவாதியை இந்த வழக்கில்

3ம் தரப்பினராக சேர்ப்பதால் வாதிக்கு எந்த அநீதியும் விளைவிக்கப்போவது இல்லை. எனவே, மனு அனுமதிக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

இறுதியாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18–ஆம் நாள் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.08.18 17:05:33 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:–**

––– இல்லை –––

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.08.18 17:05:39 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.

**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.**

**I.A.No.2/ 2025 in O.S.201 / 2023**

**நேரிய / வரைவு / உத்தரவு**

**18.08.2025**